**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**STC.No. 2011 /2021 P.W. 1**

**ஜெயராஜ் , த/பெ. சிங்கராஜ் நாள்: 05.05.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

**1)** மேற்கண்ட என்னுடைய கணக்குள்ள சிட்டி யூனியன் வங்கியில் உள்ள நடப்புக்கணக்கையும், மன்னார்குடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சேமிப்புக்கணக்கினுடைய Statement of Accounts -ஐ நீதிமன்றம் கோரினால் நான் தாக்கல் செய்ய இயலும். நான் இந்த நீதிமன்றத்தில் எந்த காசோலை வழக்கிலும் புகார்தாரராக வந்ததில்லை.

2) எதிரிக்கு ரூ.20 லட்சம் பணம் கொடுத்ததாக இந்த வழக்கு என்றால் சரிதான். ஆனால் 20 லட்சம் பணத்திற்கு எவ்வித வட்டியும் கிடையாது. எதிரி ஒன்றும் என்னுடைய உறவினர் இல்லை. மேற்படி 20 லட்சம் பணத்தையும் நான் எதிரிக்கு ஒரே நாளில் வைத்து கொடுத்தேன்.

3) எனது தரப்பு சான்றாவணமான 3 ல் நான் எந்த இடத்திலும் எதிரிக்கு எந்த ஆண்டு, எந்த மாதம், எந்த தேதியில், எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று எந்த விவரங்களையும் கூறவில்லை என்றால் சரிதான்.

4) நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முறையீடு எதிரியிடமிருந்து எனக்கு பதில் வந்த பிறகுதான் தாக்கல் செய்த முறையீடு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த தனிநபர் முறையீட்டிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரிக்கு எந்த ஆண்டு, எந்த மாதம், எந்த தேதியில், எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று எந்த விவரங்களையும் கூறவில்லை என்றால் சரிதான்.

5)மேற்கண்ட சட்டமுறை முன் அறிவிப்பிலும், முறையீட்டிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரியிடம் முதன் முதலில் 20 லட்சம் பணம் கொடுக்கும்போது எந்தவிதமான ஆதரவு ஆவணங்களும் எழுதிவாங்கிவில்லை என்றால் சரிதான்.

6) எதிரியின் கணக்கான மன்னார்குடி, சௌத் இந்தியன் வங்கிலிருந்து எனக்கு காசோலை மூலம் 17 லட்சம் பணம் வந்த விவரத்தை நான் சட்டமுறை முன் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும், முறையீட்டிலும் கூறவில்லை என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது.

7) எதிரி கொடுத்த பதில் அறிவிப்பில் 17 லட்சம் மேற்கண்ட வங்கி மூலம் எனக்கு கொடுத்ததை பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளதை படித்து பார்த்தேன். மேற்கண்ட 17 லட்சம் தொடர்பாக தனி நபர் முறையீட்டிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ நான் எவ்வித

விளக்கத்தையும் கூறவில்லை என்றால் சரிதான். கட்டுமான நிறுவனம் நடத்துவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வரவு செலவுகளை எழுதுவதற்கு நோட்டுக்கள் வைத்திருப்பேன் என்றால் சரிதான்.

8) எதிரிக்கு 20 லட்சம் கொடுத்ததாக நான் என்னுடைய வரவு செலவுகளில் குறிப்பு எழுதி வைத்திருக்கிறேன் என்றால் சரிதான். எதிரியினுடைய சட்டமுறை முன் அறிவிப்புக்கு பிறகு கூட நான் எழுதி வைத்துள்ள வரவு செலவுக்கான குறிப்புகளை எனது முறையீட்டுடன் தாக்கல் செய்யவில்லை. நான் 50 ஆயிரத்திற்கு மேல் உள்ள வரவு செலவுகளை வங்கி மூலம்தான் வரவு செலவு செய்யவேண்டும் என்கிற விவரம் எனக்கு தெரியும். ஏன் என்றால் நான் கட்டுமான நிறுவனம் நடத்தி வருவதால் எனக்கு தெரியும்.

9) நான் எதிரிக்கு 20 லட்சம் கொடுத்தேன், கொடுத்தது இன்னன்னாருக்கு தெரியும் என்று நான் பெயர் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள உறுதி மொழி ஆவணத்தை எதிரிதான் என்னிடம் கொடுத்து தாக்கல் செய்தார். அந்த உறுதி மொழி ஆவணம் எழுத்தால் எழுதப்பட்டதுதான். சுரேஷ் என்பவரும் மார்க்ஸ் என்பவரும் அந்த ஆவணத்தில் கையொப்பமிட்டார்கள் . அந்த ஆவணத்தின் தேதி தற்போது ஞாபகம் இல்லை, பார்த்தால் சொல்வேன். அந்த பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரிக்குதான்தெரியும்.

10) சுரேஷ் என்பவர் டிரைவராக இருக்கிறார். தற்போது என்ன செய்கிறார் என்று எனக்கு தெரியாது. மார்க்ஸ் என்பவர் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள உறுதி மொழி ஆவணத்தில் உள்ள விவரங்கள் எதுவும் இந்த எதிரிக்கு தெரியாது என்றும், அதனால்தான் இந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஒரு கடனுக்கு , ஒரு காசோலையைதான் குற்றமூலத்திற்கு வழக்கறிஞர் அறிவிப்பை வைத்து பயன்படுத்தலாம் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

11) இதே கடனுக்காக நான் என்னுடைய முறையீட்டில் ஏற்கனவே எதிரிக்கு 11.01.2021 ஆம் தேதியிட்டு அவர் வழங்கிய காசோலை திருப்பப்பட்டது குறித்து சட்டமுறை முன் அறிவிப்பை என் வழக்கறிஞர் மூலம் 23.01.2021 அன்று அனுப்பியதையும் எதிரி 25.01.2021 ல் அதை பெற்றுக்கொண்டதையும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

12) எதிரி என்னிடம் எவ்வித உறுதிமொழி ஆவணத்தையும் டைப் செய்து தரவில்லை என்றும், அந்த ஆவணம் என்னால் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரி உறுதி ஆவணம் எழுதி கொடுத்திருந்தால் பழைய 11.01.2021 தேதியிட்ட காசோலையையே காலதாமதத்தை மன்னிக்க மனு செய்து அதே வழக்குமூலத்தில் வழக்கை தாக்கல் செய்திருக்க முடியும் என்றும் இது பொய் வழக்கு

என்பதால் தீர்ந்து போன கடனுக்கு கொரோனா காலம் என்பதால் அவருடைய ஆவணங்களை திருப்பித்தராமல் நானே வைத்துக்கொண்டு பொய் வழக்கை, பொய் ஆவணங்களை உருவாக்கி சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் இந்த காசோலையில் சொல்வதுபோல் 20 லட்சம் கைமாற்றுக் கடன் எனக்கும் எதிரிக்கும் காசோலையில் தாக்கல் செய்த தேதியில் கடன் நிலுவையில் இல்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் ஆதரவு ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. உறவினர் அல்லாத ஒருவருக்கு ஒரு வணிகத்தில் இருக்கும் நான் 20 லட்சம் கைமாற்றுக்கடனாக கொடுத்தது நம்பத்தகுந்ததாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. பொய் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.